நாகப்பட்டினம் நகராட்சி

**2023–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் –31–ம் நாள் வியாழன் கிழமை காலை 11.00 மணியளவில் நடைபெற்ற நகரமன்ற சாதாரண கூட்ட நடவடிக்கையின் தீர்மான நகல்**

| கூட்ட நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள்களின் விபரம் | தீர்மான எண் |
|---|---|---|
| 31–08–2023 | பொருள் எண்.1<br>இந்நகராட்சி பணிக்கு 2023–2024–ஆம் ஆண்டிற்கு தேவையான எழுதுப்பொருட்கள் கணினி மையம் மற்றும் சேவை மையத்திற்கு தேவையான இரசீதுகள், புதிய வரி விதிப்பு படிவம் மற்றும் பெயர் மாற்றம் கையேடு ஆகியவற்றை அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்வதற்கும் அதற்கான உத்தேச செலவீனம் ரூ.25 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 எழுதுப்பொருட்களின் அவசர அவசியத்தை முன்னிட்டு நகர்மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி விநியோக உத்தரவு வழங்கிடவும் இச்செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 1260/2022/பி3 | தீர்மானம் எண்.168<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 31–08–2023 | பொருள் எண்.2<br>நாகப்பட்டினம் நகராட்சி இந்திய செஞ்சிலுவை சங்கத்திற்கு 2020–2021 முதல் 2021–2022 வரை பங்கீட்டுதொகை செலுத்தகோரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்.2529/2023/ஊ.வ/ , நாள்.01.08.2023 செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சியால் செலுத்தவேண்டிய பங்கீட்டு தொகை வருடத்திற்கு ரூ.5000/ – வீதம் இரண்டு வருடத்திற்கு ரூ.10000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்<br>3 பணியின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மன்றம் தொகை செலுத்தியதையும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 1191/2019/பி3. | தீர்மானம் எண். 169<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 31–08–2023 | பொருள் எண்.3<br>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு வருகை தர உள்ளதால் 14.08.2023 அன்று மாவட்ட ஆட்சிதலைவர் தலைமையில் நாகப்பட்டினம் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மாவட்ட அனைத்து துறை அலுவலர் ஆய்வுகூட்டம் நடைபெற உள்ளதால் நாகப்பட்டினம் நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பணிகளுக்கு, துப்புரவுபணி மேற்கொள்ளுதல், விளம்பரம் பலகைகள் அகற்றுதல், நகரில் சுற்றித்திரியும் மாடுகள், நாய்கள் இவைகளை அப்புறப்படுத்தல், சாலை பணிகளை செப்பணிட்டு சுத்தமாக பராமரித்தல் மற்றும் இதர செலவினங்களுக்காகவும் உத்தேச | தீர்மானம் எண். 170<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |

செலவினதொகை ரூ.20,00,000/-க்கு (இருபதுஇலட்சம்மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அலுவலககுறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |
| | 2 | பணியில் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம் |

ந.க.எண். 3500/2023/எச்1

---

31-08-2023

பொருள் எண்.4

இந்நகராட்சி பகுதிகளில் சுற்றித்திரியும் தெரு நாய்களை பிடித்து இன பெருக்கக்கட்டுபாடு அறுவை சிகிச்சை செய்தல் மற்றும் வெறிநாய் தடுப்பூசி போடும் பணிகளை மேற்கொள்வதற்காக கீழ்கண்டவாறு இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. முறையே,

| வ.எண் | நிறுவனம் பெயர் விலாசத்துடன் | விலைப்புள்ளிதொகை ஆண் மற்றும் பெண் நாய் ஒன்றுக்கு |
|---|---|---|
| 1 | மாஸ் டிரஸ்ட் ,<br>56 A தெற்கு பஜார்,<br>பாலையங்கோட்டை,<br>திருநெல்வேலி-627 002 | ரூ.1400/- |
| 2 | ஹெுட் டிரஸ்ட்,<br>அன்னை இந்திரா தெரு,<br>எம்.ஜி,ஆர்நகர்,<br>தேனி- 625 531 | ரூ.1450/- |

| | | |
|---|---|---|
| அலுவலககுறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2 | அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள மாஸ் டிரஸ்ட்என்ற நிறுவனத்திற்கு மன்றத்தின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.. |

ந. க.எண். 2396/2021/சி1

தீர்மானம் எண்.171
அ.கு.அனுமதிக்கப்பட்டது

---

31-08-2023

பொருள் எண்.5

நாகப்பட்டினம் நகராட்சி பகுதிகளில் வருகிற 25.08.2023 மற்றும் 26.08.2023 ஆகிய இருநாட்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள் ஆய்வு மேற்கொள்ள உள்ளதால் அதற்கான முன்னேற்பாடுகள் செய்யும் பொருட்டு பொது சுகாதாரபிரிவிற்கு தேவையான கிருமிநாசினி பொருட்கள், தளவாட பொருட்கள் இவைகளை விநியோகம் செய்ய கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து விலைபுள்ளி வரபெற்றுள்ளது முறையே

| வ. எண் | தளவாடபொருட்களின் விவரம் | **ஸ்ரீசரவணா ஹார்டுவேர்ஸ் குத்தாலம்** | | | **விஜயக்குமார் வடபதி** | | **சத்தியா குத்தாலம்** | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | நீர்த்த சுண்ணாம்பு பவுடர் | **1 kg** | 13.75 | 5% | 14 | 5% | 14.50 | 5% |
| 2 | பிளிச்சிங் பவுடர் | **1 kg** | 53.25 | 18% | 53.50 | 18% | 54 | 18% |
| 3 | மண்வெட்டிகாம்புடன் | **1No** | 738.50 | -- | 739.00 | -- | 740.0 | -- |
| 4 | துடைப்பம் பெரியது | **1 No** | 63.50 | 5% | 64.00 | 5% | 65.00 | 5% |

தீர்மானம் எண்.172
அ.கு.அனுமதிக்கப்பட்டது

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | ஜாடிமூங்கில் காம்புடன் | 1No | 997.00 | 5% | 998.00 | 5% | 999.00 | 5% |
| 6 | அரிவாள்பெரியது | 1 No | 991.00 | 5% | 993.00 | 5% | 995.0 | 5% |
| 7 | முள்கம்பி 12 பல்லைப்புடன் | 1 kg | 1098.00 | 5% | 1205.00 | 5% | 1210.0 | 5% |
| 8 | ஆன்னக்கூடை பெரியது | 1 No | 838.00 | 12% | 839.00 | 12% | 840.0 | 12% |
| 9 | பிரஸ்கட்டைபைப்புடன் பெரியது | 1 No | 788.00 | 5% | 789.00 | 5% | 790.00 | 5% |
| 10 | கையுறைசிந்தெட்டிக் | 1 set | 60.00 | 5% | 184.00 | 5% | 185.0 | 5% |
| 11 | மாஸ்க் | 1 No | 3.00 | 5% | 5.25 | 5% | 5.50 | 5% |
| 12 | கம்பட் | 1 No | 858.00 | 12% | 859.00 | 12% | 860.0 | 12% |
| 13 | கரண்டிகாம்புடன் | 1 No | 1205.00 | 5% | 1210.00 | 5% | 1220.0 | 5% |
| | மொத்தம் | | **7707** | | **7952** | | **7978** | |

மேற்கண்டவாறு வந்துள்ள மூன்று விலைப்புள்ளிகளில் குறைவாக தந்துள்ள ஸ்ரீ சரவணா ஹார்டுவேர்ஸ் குத்தாலம் அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| அலுவலககுறிப்பு | | |
|---|---|---|
| | 1 | மன்றம் அனுமதிக்கலாம் |
| | 2 | அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஸ்ரீசரவணாஹார்டுவேர்ஸ் குத்தாலம் அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்று கொண்டதின் பேரில் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விநியோக ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். |

ந.க.எண். 3500/2023/எச்1

31–08–2023

பொருள் எண்.6

நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கீழ்கண்டவாறு கட்டிடங்கள் கட்டப்பட்டு முழுமை அடைந்துள்ளதால், நகராட்சியின் வருவாயினை பெருக்கிறும் வகையிலும், பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் வகையில் பொது ஏலம் விடுவதற்கு தயார் நிலையில் உள்ளது. மேற்படி கட்டிடங்களை பொது ஏலம் விடுவதற்கு வைப்புத்தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நகரமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எ ண் | குத்தகை இனங்கள் | கடைகள் எண்ணிக் கை | வைப்புத் தொகை ரூ | தாக்கல் செய்யவேண்டிய சொத்துமதிப்பு சான்றிதழ் மதிப்பு |
|---|---|---|---|---|
| 1 | நகர்மன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்ட ( தம்பிதுறை பூங்கா) | 2 | ஒரு கடைக்கு ரூ.3,00,000 | 6,00,000 |
| 2 | மூலதன மானியநிதியில் புதிய பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டுள்ள | 17 | ஒரு கடைக்கு ரூ.2,00,000 | 10,00,000 |

தீர்மானம் எண்.173
அ.கு.அனுமதிக்கப்பட்டது

| | | | | |
|---|---|---|---|---|
| | கடைகள் | | | |
| 3 | கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தில் கட்டப்பட்ட கடைகள் ( ஆசாத் மார்க்கெட்) | 28 | ஒரு கடைக்கு ரூ.3,00,000 | 6,00,000 |
| 4 | தூய்மை இந்தியா திட்டத்தில் கட்டப்பட்ட கட்டண கழிவறை ( யானைக்கட்டி முடுக்கு நாகூர்) | 1 | ரூ.3,00,000 | 10,00,000 |

| | | |
|---|---|---|
| அலுவலககுறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2 | மேற்படி திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள கடைகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரும் வகையில் பொது ஏலம் விடுவதற்கு உரிய தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.. |
| | 3 | சால்வன்சி தாக்கல் செய்யப்படா விட்டால் வைப்புத்தொகை இரட்டிப்பாக வசூல் செய்ய மன்றம் அனுமதிக்கலாம் |

க.எண். 4370/2017/அ1

31-08-2023

பொருள் எண்.7

நாகப்பட்டினம் நகராட்சியில் நகர மேம்பாட்டு நிதி 2022-23ன் கீழ் கீழ்கண்ட பணிக்கு 21-07-2023-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தநிறுவனங்களின் விவரம் | மதிப்பீட்டு விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | குறைவு | அதிகம் |
| 1 | நாகப்பட்டினம் கோட்டைவாசல்படி நகராட்சி பூங்கா வளாகத்தில் சிறிய மின்கோபுர விளக்கு அமைத்தல் | 4.00 | மெர்சஸ்.பவித்திரா அன்ட்கோ, நாகப்பட்டினம் | 0.06% | -- |
| | | | மெர்சஸ்.ஸ்ரீகுமரன் எலக்ட்ரிக்கல்ஸ் நாகப்பட்டினம் - | -- | 1.52% |
| 2 | நாகப்பட்டினம் டாடா நகர் குடியிருப்பு வளாகத்தில் | 4.00 | மெர்சஸ். பவித்திரா அன்ட்கோ, நாகப்பட்டினம் | 0.06% | -- |

தீர்மானம் எண்.174
அ.கு.அனுமதிக்கப்பட்டது

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சிறிய மின்கோபுர விளக்கு அமைத்தல் | | மெர்சஸ்.ஸ்ரீகுமரன் எலக்ட்ரிக்கல்ஸ் நாகப்பட்டினம் | -- | 1.21% |

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட சதவிகிதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள மெர்சஸ். பவித்திரா அன்ட்கோ நாகப்பட்டினம் ஒப்பந்த நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

| | | |
|---|---|---|
| அலுவலககுறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |
| | 2 | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம் |

ந.க.எண். **1623**/2022/இ1

---

31-08-2023

பொருள் எண்.8

நாகப்பட்டினம் நகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு 15-வது நிதிக்குழு மானிய நிதி 2022-23ன் (Tied Grant) கீழ் 23 எண்ணிக்கையிலான இலகுரக வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வாகனங்களுக்கு வாகனபதிவுக்கட்டணம், வாகன காப்பீடு, ரிப்ளெக்சன் ஸ்டிக்கர், நம்பர் பிளேட், மஞ்சள் வர்ணம் பூசுதல் போன்ற பணிகள் மேற்கொள்ள ஆகும். செலவினம் ரூ.12,13,894/-னை பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று கொள்முதல் செய்யப்பட்ட நிறுவனமான மெர்சஸ் வீ.பீ.மோட்டார்ஸ் திருவாரூர் என்பவருக்கு வழங்கிட எடுக்கப்பட்ட தொடர் நடவடிக்கைகள் விவரத்தினை நகர்மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது/

| | | |
|---|---|---|
| அலுவலககுறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2 | மேற்கண்ட பணிக்கு பணியின் அவசியத்தினை கருத்தில் கொண்டு தொகையினை வழங்குவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமைக்கும் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்பட்டதனை மன்றம் அங்கீகரிக்கலாம். |
| | | மேற்கண்ட பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். |

ந.க.எண். 2846-3/2020/இ1

தீர்மானம் எண்.175
அ.கு.அனுமதிக்கப்பட்டது

<table>
<tr><td>31-08-2023</td><td>பொருள் எண்.9<br>நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி மகளீர் மேல்நிலைப்பள்ளியில் நபார்டு திட்டத்தின் கீழ் புதியதாக ஒன்பது வகுப்பறை கட்டடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள இடத்தில் உரிய இடவசதி இல்லாததால் இடையூராக உள்ள பழைய உபயோகமற்ற கட்டடங்களை இடித்து தருமாறு செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டம் நாகப்பட்டினம் அவர்களின் கடிதம் எண்.எம்.,/கோ8/வபி/இவதெஅ/2023 நாள்.01-08-2023 கடிதம் வாயிலாக கேட்டுக்கொள்ளப்பட்டது. மேற்காணும் பொருள் தொடர்பாக நாகப்பட்டினம் நகராட்சி மகளீர் மேல்நிலைப்பள்ளியில் நபார்டு திட்டத்தின் கீழ்புதியதாக ஒன்பது வகுப்பறை கட்டடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள இடத்தில் உரிய இடவசதி இல்லாததால் இடையூராக உள்ள பழைய உபயோகமற்ற கட்டடங்களை பொதுப்பணிதுறையின் மூலமே இடித்து அப்புறப்படுத்தி புதியதாக ஒன்பது வகுப்பறை கட்டடம் கட்டி பயன்பாட்டில் கொண்டு வருவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><td>அலுவலககுறிப்பு</td><td>1</td><td>மன்றம் அனுமதி வழங்கலாம்.</td></tr>
</table>
ந.க.எண். 4025 /2022/இ1</td><td>தீர்மானம் எண்.176<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>31-08-2023</td><td>பொருள் எண்.10<br>நாகப்பட்டினம் நகராட்சி வார்டு எண்.17 கூக்ஸ் ரோட்டில் உள்ள கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் புதியதாக கட்டப்பட்டுள்ள நூலகம் மற்றும் அறிவுசார் மையத்தினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் விரைவில் திறந்து வைக்கப்பட உள்ளதின் காரணமாக மேற்படி கட்டடத்தை நகராட்சி நிர்வாக இயக்குநராக இணை இயக்குநர் சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களால் நேராய்வு செய்ததில் மேற்படி நூலகம் மற்றும் அறிவுசார் மையத்திற்கு கணினி மற்றும் ஸ்மாட்சிளாஸ் அமைக்கும் பணிகளை உடன் மேற்கொள்ள அறிவுறுத்தியதின் பெயரில் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.20.00 இலட்சத்தில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><td>அலுவலககுறிப்பு</td><td>1</td><td>மன்றம் அனுமதி வழங்கலாம்.</td></tr>
<tr><td></td><td>2</td><td>மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்</td></tr>
<tr><td></td><td>3</td><td>மேற்படி பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.</td></tr>
</table>
ந.க.எண். /2023/இ1</td><td>தீர்மானம் எண்.177<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>31-08-2023</td><td>பொருள் எண்.11<br>நகர்மன்ற உறுப்பினர் திரு.மு.பரணிகுமார் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மான<br>நகல்-<br>❖ 33-வது வார்டுக்குட்பட்ட அக்கரைகுளம் வடக்கு ரோடு வழியில் ஓடும் தேவநதி ஆற்றின் புதிதாக கட்டிய பொழுது ஆற்றை அடைத்து பாலம் அமைக்கப்பட்டது. பாலம் கட்டி முடிந்தும் ஆற்றின் குறுக்கே கொட்டபட்ட மண் இன்னும் அகற்றப்படாமல் உள்ளது.பருவமழை தொடங்குமுன் மண் மேடுகளை அப்புறபடுத்தியும், புதிதாக கரைகட்டும் மேலகோட்டை வாசல் பாலம் முதல் இரயில்வே பாலம் வரைகிழக்கு பகுதியில் கரை அமைப்பதற்காக ஆற்றில் இறக்கி விடப்பட்ட மண்களை அப்புறபடுத்தவேண்டுகிறேன்.</td><td>தீர்மானம் எண்.178<br>தீர்மானிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | ❖ நகராட்சி பகுதிகளில் புதிய குடிநீர் குழாய் பதித்து அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்க அனைத்து வீடுகளுக்கும் வீட்டு வரி போட்டு கொடுத்து அதன் முலம் நகராட்சி வருவாய் ஈட்டுவதோடு தவறாக இணைப்பு கொடுக்காமல் தடுக்கவேண்டியும் அனைவருக்கும் குடிநீர் இணைப்பு வழங்கப்படவேண்டும். இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | |
| 31–08–2023 | பொருள் எண்.12<br>**நகர்மன்ற உறுப்பினர் திரு.ஆர்.எ.டி.அண்ணாதுரை அவர்களால் கொண்டுவரப்படும்**<br>**தீர்மான நகல்–**<br>❖ 34–வது வார்டுக்குட்பட்ட கீரைக்கொல்லை கீழ்மேல் தெருவும், செக்கடி தெருவும் இணையும் இடத்தில் சாக்கடை செப்பனிடவும், அதனை உடனடியாக சரிசெய்யும் வண்ணம் புதியதெரு கல்வெட்டு ஒன்றை அமைத்து தரவும் இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன் | தீர்மானம் எண்.179 தீர்மானிக்கப்பட்டது. |
| 31–08–2023 | பொருள் எண்.13<br>**நகர்மன்ற உறுப்பினர் திரு.ஆர்.எ.டி.அண்ணாதுரை அவர்களால் கொண்டுவரப்படும்**<br>**தீர்மான நகல்–**<br>❖ 34–வது வார்டில் இயங்கிவரும் சி.எஸ்.ஐ மேல்நிலைப்பள்ளி பலரின் கல்வி கண்களை திறந்த மிகவும் பழமையும், பெருமையும் வாய்ந்த பள்ளியாகும். இப்பள்ளி துவங்கி 2023–ஆம் வருடம் 200–வது ஆண்டு நிறைவடையுள்ளதையொட்டி பள்ளி நிர்வாகம் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் 200வது ஆண்டு நினைவு நுழைவு வளைவு அமைத்துக்கொள்ள அனுமதி அளிக்கவேண்டி. | தீர்மானம் எண்.180 தீர்மானிக்கப்பட்டது. |
| 31–08–2023 | பொருள் எண்.14<br>**நகர்மன்ற உறுப்பினர் திரு. E.S.M.சுரேஷ் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மான நகல்–**<br>❖ 16–வது வார்டுக்குட்பட்ட நாகப்பட்டினம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள JCB பழுதடைந்து விட்டதால், நகராட்சியில் உள்ள தூய்மைப்பணி மற்றும் சாலை சீரமைப்பு பணிகளுக்கு வாடகைக்கு JCB அமர்த்தும் சூழ்நிலை ஏற்படுகிறது. இதனால் நகராட்சிக்கு அதிகளவில் செலவினம் ஏற்படுகிறது. எனவே பழைய JCB யை மாற்றிவிட்டு புதிய JCB வாங்க மன்றத்தின் அமைத்து தரவும் இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண்.181 தீர்மானிக்கப்பட்டது. |

/உண்மை நகல்/

இரா.மாரிமுத்து
நகரமன்ற தலைவர்